மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 117/2019

பெயர் : நாராயணசாமி
சாட்சி – வா.சா–1 நாள்: 27.01.2026

---

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பு)**

1. 1951ம் ஆண்டு வெங்கடகிரி நாயக்கர் தனது சொத்தை இரண்டாக பிரித்து பி செட்டியூல் சொத்தை ரங்கசாமி நாயுடுவுக்கும் சி செட்டியூல் சொத்தை சீனிவாசலு நாயக்கருக்கும் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். வாதிகள் நாங்கள் அனைவரும் சீனிவாசலு நாயக்கரின் வாரிசுகள் என்றால் சரிதான். வெங்கிடசாமி நாயுடு 2001ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு ரங்கநாயகி, சரஸ்வதி, கோவிந்தராஜன், ராமகிருஷ்ணன் மற்றும் தேவராஜன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. சீனிவாசலு நாயக்கர் மற்றும் வெங்கிடசாமி நாயுடு ஆகியோருக்கு கிணறு, வாரி மோட்டார் பம்பு செட், மின் இணைப்பு, வண்டித்தடம் ஆகியவற்றில் பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். வெங்கிடசாமி நாயுடுவின் வாரிசுகளிடம் இருந்துதான் பிரதிவாதிகள் 2010ம் ஆண்டு கிரையம் வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் மற்றும் வாதிகளின் பங்குகளுக்கு இடையே வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் இடத்தில் தலா 3 அடி என பொதுத்தடம் 6 அடி விடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. பிரதிவாதிகள் கிரையம் பெற்ற பின்னர், கிணறு, வாரி மோட்டார் பம்பு செட், மின் இணைப்பு, வண்டித்தடம் ஆகியவற்றில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். கிணறு, வாரி மோட்டார் பம்பு செட், மின் இணைப்பு, வண்டித்தடம் ஆகியவை பிரிக்கப்படாத பொது சொத்து என்றால் சரிதான். வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் இருவருக்கும் மேற்படி பொதுவில் பாத்தியமான சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை

பரிகாரம் கோரியுள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றும் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றும், சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.01.27 18:09:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.